# புறநானூறு கூறும் பழந்தமிழர் வாழ்வில் கள் பெருமிடம்

*திருமதி ச. முருகலெட்சுமி*
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
காமராஜ் மகளிர் கல்லூரி, தூத்துக்குடி

மலர்: 12

சிறப்பிதழ்: 1

மாதம்: மார்ச்

வருடம்: 2025

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

DOI:
https://doi.org/10.5281/zenodo.14958675

**முன்னுரை**

மனித இனம் தனது பசியின் தேவையைப் பூர்த்தி செய்ய உணவைத் தேடி அலைந்து நாகரிகவளர்ச்சி பெற்றான். அவனுடைய உணவில் காய்கறி மற்றும் புலால் சார்ந்த உணவுகள் இடம் பெற்றன. நெருப்பின் பயனை அறிந்தபொழுது சமைத்து உணவு உண்டான். உணவு மட்டுமின்றி அதனோடு தனது களைப்பு நீங்கி உற்சாகம் பெற பல குடி வகை களையும் பருகினான். அதனை "கள்" என அழைத்தனர். கள்ளைப் பருகி தாங்கள் உற்சாகத்தைவெளிப்படுத்தினர். என்பதை இலக்கியங்கள் வழி அறிய முடிகின்றது. தமிழர் வாழ்வின் கருவூலமாகதிகழும் புறநானூறு கூறும் பழந்தமிழரின்வாழ்வில்கள்ளின் பயன்பாடு பற்றி ஆராய்வதாக இவ்வாய்வுஅமைகின்றது.

**கள்ளின் சிறப்பு**

பழந்தமிழரின் ஒவ்வொரு நிகழ்விலும் "கள்" இடம் பெற்றிருந்தது அவர்கள் உணவோடுகள்ளினைப் பயன்படுத்தி உள்ளனர் அதனை உற்சாக பானமாகவும் மகிழ்ச்சியின் வெளிப்பாடாகவும் பருகினர். நாளும் உடல்உழைப்பை மேற்கொள்ளும் மக்கள் தங்கள் களைப்பை போக்க "கள்" பருகினர்

**"காட்டொடு மிடைந்த சீயா முன்றில்**
**நாட்செருக்கு அனந்தர்த்துஞ்சுவோனே"**

போரில் வெற்றி பெற்று தான் கொணர்ந்தப் பொருட்களைப் பகிர்ந்து கொடுத்துவிட்டு களைப்பு நீங்க கள்ளி னனைப் பருகி உறங்குகின்றவீரனை பாடுகின்றதுஇன்று "கள்" அருந்துவதுதடை செய்யப்பட்டுள்ளது எனினும் அது நம் முன்னோர் வாழ்வின் பழக்க வழக்கத்தோடுகலந்த ஒரு செயலாக காணப்படுகின்றது. இதனை

**"வண்டு மூசு தேடல் மாத்தி மகிழ்சிறந்து"**

உடல் வலிமை உடைய மக்கள் வண்டுகள்மொய்க்கக்கூடிய தேறலினை அருந்தி வருத்தம் நீங்கிய மனிதன் மகிழ்ச்சியை வெளிப்படுத்து வதைகாண முடிகின்றது. அக்காலத்தில்பெண்களும் கள் அருந்தும் பழக்கம் உடையவர்களாக இருந்தனர். கள் என்பது உணவின் அங்கமாக காணப்பட்டது அது போதைப் பொருள் போன்று பயன்படுத்தப்படவில்லை.

உணவின் அங்கம் அனைவரும் பாகுபாடு இன்றி அருந்தி மகிழ்ந்தனர். அதியமானும் ஔவையும் மிகச்சிறந்த நண்பர்கள் அவர்களின் நட்பு இன்றளவும் பேசப்படும் நட்பின் இலக்கணமாகக் காணப்படுகின்றது. தனது இல்லத்திற்கு வரும் ஔவைக்கு பல்வேறு உணவுகளுடன் தேறலையும் பருகக் கொடுத்து ள்ளான். என்பதன் வழி ஆண், பெண் வேறுபாடு இன்றி இப்பானத்தை அனைவரும் பருகமகிழ்ந்துள்ளனர்

**"சிறிய கட் பெறின் எமக்கீயும் மன்னே**
**பெரிய கட் பெறினே**
**யாம் பாட தான் மகிழ்ந்து உண்ணும் மன்னே[3]**

அதியமான் சிறிய அளவில் கள்ளினை பெறும் பொழுது அதனை தனக்குத் தருவான் என்றும் அதிக அளவில் கிடைக்கும் பொழுது எனக்கும் கொடுத்து அவனும் பருகுவான் என அவ்வை தான் கள் உண்டதையும் அதியமானின் விருந்தோம்பல் சிறப்பையும் விளக்கிக் கூறுகிறார். இதிலிருந்து புலவர்களின் களைப்பும், சோர்வும் நீங்க முதலில் வந்தவுடன் வழங்கப்படும் உற்சாக பானமாக கருதப்படுகின்றது. புலவர்கள் மன்னர்களை காட்டிலும் சிறப்பு பெற்றவர்களாக இருந்தனர். புலவர் உறவு மிகுந்த செல்வாக்கு பெற்றதாக காணப்பட்டது மன்னர்கள் புலவர்களை தங்கள் அரண்மனைக்கு அழைத்து அவர்களின் வருத்தம் நீங்கும்படி உபசரித்தனர் சுவை மிகுந்த கலங்கிய மதுவினை புலவர் பெருமக்களுக்கு வழங்கி தெளிந்த தேறதலை தானுண்டு மகிழ்ந்தனர். ஏனெனில் புலவர்களால் பாடப்படுவதை மன்னர்கள் மிகுந்த செல்வாக்கு நிறைந்ததாக கருதினர்.

## உணவும் கள்ளும்

இன்றைய கால விருந்தோம்பல் பல வகை உணவுப் பொருட்கள் உள்ளடக்கியதாக காணப்படுகின்றது அன்றைய கால விருந்து என்பது உடலுக்கும், மனதிற்கும் வலிமை தரக்கூடிய சமச்சீர் உணவாக மக்களால் பயன்படுத்தப்பட்டது. பழந்தமிழர் உணவு முறையை அறியும் பொழுது உடலில் செரிமானம் எளிதில் நடைபெற்று உடலை சுறு சுறுப்பும் வலிமையும் பெரும்படி அக்கால உணவு வகைகள் மக்களால் பயன்படுத்தப்பட்டது. எவ்வகை உணவினை உண்டாலும் அதனுடன் ஒரு சிற்றுண்டி வகையை சுவைய அறிந்து உட்கொள்ளும் பழக்கம் உடையவர்களாக மக்கள் காணப்பட்டனர். உணவின் ஒரு பகுதியாக கள்ளினை மட்டும் பருகாமல் அதனுடன் ஏதேனும் ஒரு புலால் உணவினை சேர்த்து உண்டனர்.

**"ஓழிமடல் விறகின் கழிமீன் சுட்டு**
**வெங் கள் தொலைச்சியும் அமையார்"[4]**

நெல் வயலில் புள் விரட்டுபவர்கள் அங்கு கிடைக்கும் பனங் கருக்கு விறகினைக் கொண்டு மீனின் சதைப்பகுதி நன்குவேகம்படி சுட்டு கள்ளின் துணை உணவாக சுவைத்து உண்டனர்

**"தண் மீன் சூட்டோடு தளர்தலும் பெருகுவீர்"[5]**

கள்ளுடன் சுடப்பட்ட மீன் சிறந்த உணவாகும், சுவையானதாகவும் அமைந்துள்ளது என்பதினை பொருணராற்றுப்படை படையில் குறிப்பிடப்பட்டுள்ளது தேர்வுடன் சுடப்பட்ட மீனும் இறைச்சியும் சிறந்த துணை உணவாக கருதப்பட்டது விருந்தினர்களுக்கும், பிறருக்கும் அதனை வழங்கும் பொழுது இறைச்சியுடன் மதுவினை வழங்கினர்.

## செழிப்பின் அடையாளம்

சங்க காலம் தமிழர்களின் பொற்காலம் என அழைக்கப்படும் அளவிற்கு செல்வவளமும், இயற்கைவளமும் நிறைந்தது.

மக்கள் எந்த கவலையும் இன்றி இயற்கையோடு இயைந்த வாழ்க்கையை நடத்தினர். அவர்களது உணவு முறையும் இயற்கையோடு இணைந்த பொருட்களைக் கொண்டு அவித்தும் நெய்யில் பொரித்தும் உண்டனர். உணவிற்கு பஞ்சமி இன்றி மக்கள் செழிப்போடு வாழ்ந்தனர். இதனை ஔவையார்

**"எத்திசை செல்லினும் அத்திசைச்சோறே"தி** என உணவு வேண்டி யாருக்காகவும் காத்திருக்கும் வறிய நிலைமை அக்காலத்தில் மக்களுக்கு இல்லை எனவும் மன்னர்களும், புரவலர்களும்

தன்னை நாடி வருபவர்களுக்கு பல்லின் கூர்மை மழுங்கும் அளவிற்கு ஊனையும், உணவையும் தந்து உபசரித்தனர். அதன் வரிசையில் கள் என்பது இல்லத்தில் தயாரிக்கப்பட்டு மக்களுக்கு வழங்கப்பட்டதாக காணப்படுகின்றது.

தேறல் குடி வகையாக மட்டுமின்றி வாழ்த்துப் பொருளாகவும், வழிபடும் பொருளாகவும் சமூகத்தில் காணப்படுகின்றது. தங்களுக்குத் தேவையான கள்ளினை மக்கள் தங்கள் இல்லத்தில் தயாரித்துக் கொண்டனர் அதன் தயாரிப்பு முறையும் அறிந்திருந்தனர்.

### இல்லடு கள்ளின் சில்குடி சீறூர்ப்தீ

வீட்டில் கள் தயாரிக்கும் பொழுது ஏற்படும் புகையானது ஊர் முழுவதும் சென்று மனம் வீசும் படி அச்சீறூர் காணப்படுகின்றது. தெரு முழுவதும் புகையிலை கமலும் படி வீசப்பட்ட கள்ளானது இல்லம் தோறும் தயாரிக்கப்பட்டதை அறிய முடிகின்றது. இதனை இல்லடு கல்லின் தோப்பி பருகிது கள்ளினை வீட்டில் தயாரித்து அதனை புளிக்கச் செய்தனர். கள்ளின் புளிப்புச்சுவை அதிகரிக்கும் பொழுது அதன் சுவையும், தரமும் அதிகரிக்கிறது. இன்று நாம் பயன்படுத்தும் "நொதித்தல்" என்னும் முறையை அவர்கள் பயன்படுத்தினர் வீட்டில் தயாரிக்கும் கல்லினை

**"நிலம் புதைப் பழுனிய மட்டின் தேறல்"**

பாத்திரத்தில் நிரப்பப்பட்ட கள்ளானது நிலத்தை தோன்றி புதைக்கப்படுகிறது. புதைக்கப்படும் பொழுது அதில் புளிப்புச்சுவை ஏறி முதிர்ந்து சுவை நிறைந்த கள்ளாக மாறுகின்றது. அதனைப் பின் பெரிய சாடிகளில் சேமிக்கின்றனர். அவ்வாறு ஊற்றப்படும் கள் பாத்திரத்தை மக்கள் வாழ்த்திப்பாடுகின்றனர்.

**கள்ளின் வாழ்த்தி கள்ளின் வாழ்த்திணீ**

என்ற வரிகள் கள் இருக்கும் பாத்திரத்தை மக்கள் வாழ்த்தி அதனை பருகினர் என்பதை அறிய முடிகின்றது.

கள்ளினைப் பருகும் பொழுது பருகுகின்றவர்கள் கைதவறி சிந்தும் துளிகள் பெருகி ஓடி, சேர் ஆகின்றதுயானைகள்விளையாடி மகிழ்கின்றனர் என்பதை கருங்கள் பருகினர் நடுங்கு கை உகித்த நறுஞ்சேறுறு ஆடிய வருந்தலை யானை இதன் வழிகள் அருந்துகின்றனர்கள், எண்ணிக்கையும் கல் தயாரிக்கப்படும் அளவினையும் நம்மால் அறிய முடிகின்றது.

### வழிபடு பொருள்

பழங்கால மக்களின் முக்கிய வழிபாடுகளுள் ஒன்று நடுகல் வழிபாடு ஆகும். போரில் வீர மரணம் அடையும் வீரனின் பீடும், பெருமையும் நடுகலில் குறிக்கப்படும் அவ்வாறு நடப்படும் நடு கல்லிற்கு படையல் படைக்கப்படுகின்றது. இன்றளவும் இறந்தவர்களுக்கு வழிபாடு செய்யும்பொழுது அவர்கள் விரும்பியப் பொருட்களை படையல் போடப்படுவதை நாம் காண முடிகின்றது.

**"நடு கல் பீலி சூட்டி நார் அரி**
**சேறுகலத்து உகுப்பவும்"**

நடுகலானது தேர்ந்தெடுக்கப்பட்டு நீராட்டி அதற்கு பீலி சூட்டி அழகுபடுத்தப்படுகின்றது. பழிப்பொருளாக கள் படைக்கப்படுகின்றது. இதனை

**"நடு கல் பீலீ சூட்டில் துடிபடுத்து**
**தோப்பிக் கள்ளொடு துருஉப் பலி"**

நடுகல் என்பது மனிதன் வழிபட்ட முதல் வழிபாடு ஆகும் ஆரம்பத்தில் இயற்கை வழிபட்ட மனிதன் தன் வீரத்தை பறைசாட்சி உயிர் நீத்த வீரனை வணங்கத் தொடங்கினான் அதற்கான சிலை போன்ற உருவங்களை நாடாது அவனது நினைவாக கல் நடப்பட்டு வழிபாடு செய்யப்பட்டது. அதற்கு அலங்காரமும், படையலும் பலிப் பொருட்களாக வழங்கப்பட் டன.

### அகழ்வாராய்ச்சியில்கள்

இன்றைய தொழில்நுட்பத்தின் உதவியுடன் முன்னோர்கள் வாழ்ந்த பகுதிகளை அடையாளம் கண்டு தொல்லியல் வல்லுனர்கள் அகழ்வாராய்ச்சி செய்து அதன் வழி கிடைக்கும் பொருட்களைக் கொண்டு வரலாற்றையும் பண்பாட்டையும் அறிகின்றனர் இலக்கியங்களில் கூறப்பட்ட

சான்றுகளும். அகழ்வாராய்ச்சியின் சான்றுகளும் நிறுவப்படும் பொழுது அங்கு நாகரிகம் தோன்றி வளர்ந்தது என அறிவியல் முறையில் உறுதி செய்யப்படுகின்றது பழங்கால மக்கள் கள் குடிக்கும் பழக்கமும் வெளிநாடுகளில் இருந்து கள்ளினை இறக்குமதி செய்ததையும் தற்போது அகழ்வாராய்ச்சியாளர்கள் நிரூபித்துள்ளனர். அரிக்க மேடு எனும் இடத்தை ஆழ்வாராய்ச்சி செய்த போது அங்கு கிமு முதல் நூற்றாண்டில் யவனர் தங்கி இருந்த வணிகநிலையம் கண்டுபிடிக்கப்பட்டது. அதில் கிரேக்க சாடிகள் கிடைத்தன. அவை ரோம் நகரத்தில் செய்யப்பட்டது என தெரிகிறது.

**யவன் நன்கலம் தந்த தண் கமழ் தேறல்**
**பொன் செய் புனை கலத்து ஏந்திஞு**

என்ற புறநானூற்று பாடல் வரிகள் மூலம் யவனார்கள் மதுபானங்களை தமிழ்நாட்டில் விற்பனை செய்தனர் என்பதை அறிய முடிகின்றது. பாலாற்றுப்படுகையில் செய்த அகழ்வாராய்ச்சியில் யவன மதுபானச் சாடிகள் கிடைத்துள்ளன. அவை "அம்பொரெ" என அழைக்கப்பட்டன அதில் மேலை நாடு களிலிருந்து யவனர்கள் கொண்டு வந்த இரட்டைக் கைப்பிடிச் சாடிகள் கிடைத்துள்ளதை இவை தமிழக மக்கள் மதுவினை பிற நாடுகளில் இருந்து இறக்குமதி செய்து பருகியதை அறிய முடிகின்றது.

## முடிவுரை

மக்களின் பழக்கம் வழக்கமாக மாறுகிறது அந்த வழக்கமே பண்பாடாக மாறுகிறது அப்பண்பாட்டினை இலக்கியங்கள் பதிவு செய்கின்றன. அதன் வழி புறநானூறு அக்கால மக்களின் வாழ்வியல் நிகழ்வுகளை நமக்கு விளக்கி உரைக்கும் வரலாற்று ஆவணமாக காணப்படுகின்றது. அன்றாடத் தேவைகளுள் ஒன்றான உணவுப் பொருட்களில் உற்சாக பானமாக கருதப்பட்ட கள் எனும் குடிவகை மக்கள் வாழ்வில் பிரிக்க முடியாத அளவிற்கு ஒன்றி காணப்படுகின்றது. கள்ளினை உணவோடு பருகும் பழக்கத்தை பெண்களும் மேற்கொண்டனர் என்பது இலக்கியங்கள் வழி அறிய முடிகின்றது. குறிப்பாக அது போதை பொருளாக கருதப்படவில்லை மாறாக உணவின் அங்கமாக உற்சாக பானமாக பயன்பட்டது என்பதை புறநானூறு வழி அறிய முடிகின்றது.

## அடி குறிப்புகள்

1. புறம். 316(2 - 3)
2. நெடு. 33
3. புறம்.235 ( 1-3)
4. புறம். 29 (14 - 15)
5. பொருந. 282
6. புறம்.206 (13)
7. புறம்.328 (1)
8. பெரும். 142
9. புறம்.120(12)
10. புறம்.65 (15 - 16)
11. புறம்.232(3 -4)
12. அகம்.35(8 - 9)
13. மயிலை.சீனி.வெங்கடசாமி. பழந்தமிழர் வாணிகம் - ப. 123
14. மேலது. ப.161

## துணைநூற் பட்டியல்

1. புறநானூறு, இளம்பூரணனார் உரை சாரதா பதிப்பகம், ஜி - 4, சாந்தி அடுக்ககம், 3,ஸ்ரீகிருஷ்ணாபுரம் தெரு, ராயப்பேட்டை, சென்னை 14.
2. அகநானூறு - புலியூர் கேசிகன் உரை, சாரதா பதிப்பகம், ஜி - 4, சாந்தி அடுக்ககம், 3, ஸ்ரீ கிருஷ்ணாபுரம் தெரு, ராயப்பேட்டை, சென்னை 14.
3. பத்துப்பாட்டு - மோகன்(உ.ஆ), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 41டி சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், சென்னை, முதற்பதிப்பு 2007
4. பழங்காலத்தமிழர் வாணிகம் - வேங்கடசாமி.சீனி.மயிலை நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 41டி சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், சென்னை, முதற்பதிப்பு 2002